**தெற்கு அதிவேக பாதை விரிவாக்கல் செயற்திட்டம் - பகுதி I - 2021**

தெற்கு அதிவேக பாதை விரிவாக்கல் செயற்திட்டம் - பகுதி I இன் 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி**

செயற்திட்டத்தின் கடன் உடன்படிக்கையின் பிரகாரம், நெடுஞ்சாலைகள் அமைச்சு கருத்திட்ட நிறைவேற்று முகவராகவும் வீதி அபிவிருத்தி அதிகாரசபை அமுலாக்கல் முகவராகவும் உள்ளன. அம்பாந்தோட்ட சர்வதேச மைய அபிவிருத்தி நடவடிக்கைக்கு ஆதரவளித்தல் மற்றும் ஊக்கப்படுத்தலிற்கு வீதி வலையமைப்பின் அபிவிருத்தி செய்தல் செயற்திட்டத்தின் பிரதான நோக்கமாகும். கடன் உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மொத்த மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 103,280 மில்லியனுக்கு சமமான ஐ.அ.டொலர் 804.11 மில்லியன் ஆக உள்ளதுடன் அதில் ரூபா 87,788 மில்லியனுக்கு சமமான ஐ.அ.டொலர் 683.49 மில்லியன் சீனாவின் ஏற்றுமதி இறக்குமதி வங்கியால் நிதியளிப்பதற்கு உடன்பாடு காணப்பட்டது. மீதித் தொகை ரூபா 15,492 மில்லியன் இலங்கை அரசாங்கத்தினால் வழங்க எதிர்பார்க்கப்பட்டிருந்தது. செயற்திட்டமானது அதன் நடவடிக்கைகளை 2016 சனவரி 19 இல் தொடங்கியிருந்ததுடன் 2019 ஜூலை 18 இல் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டிருந்தது.

**1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 2.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களிலிருந்து செம்மையாக்கல்களின் தாக்கத்தை தவிர்த்து, செயற் திட்டத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாரா நிதி நிலைமையியையும் நிதிச் செயலாற்றல் மற்றும் அதனது முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் அதனுடன் இனைந்த நிதிக் கூற்றுக்கள் என்பன இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க உண்மையானதும் நேர்மையானதுமான நிலைமை ஒன்றை தருகின்றது என்பது எனது அபிப்பிராயம் ஆகும்.

**1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கருத்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

### 1.6 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கருத்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு நலிவுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக உரிய உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| இல | கணக்கீட்டுக் குறைபாடுகள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளர் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்கள் இல.08 இற்கு முரனாக காணி சுவீகரிப்பின் இழப்பீடு மீது செலுத்த வேண்டிய சட்டரீதியான இழப்பீடு ரூபா 21 மில்லியன் மற்றும் தாமத வட்டி ரூபா 166 மில்லியன் போன்றனவற்றிற்கான ஏற்பாடு 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக்கூற்றுக்களில் செய்யப்பட்டிருக்கவில்லை. | எஸ்பிடி பிரிவின் மூடலின் பின்னர் காணி சுவீகரிப்புக்கள் ஆர்டிஏ வின் காணிப்பிரிவிற்கு மாற்றப்பட்டுள்ளது. | இலங்கை பொதுத்தறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்கி ஒழுக வேண்டும். |
| (ஆ) | நடைமுறைப் பொறுப்புக்களின் கீழ் காணி சுவீகரிப்பிற்கு செலுத்தவேண்டியதாக காட்டப்பட்டிருந்த ரூபா 3.5 மில்லியன் தொகையான ரத்துச்செய்யப்பட்ட காசோலைக்கான ஆவணச்சான்றுதல்கள் மீதியை உறுதிப்படுத்த கணக்காய்விற்கு காணப்பட்டிருக்கவில்லை. | ஆர்டிஏ காணிப்பிரிவு ரத்துச்செய்யப்பட்ட காசோலை தொடர்பான ஆவணச்சான்றுகளை தேட அறிவுறுத்தப்பட்டுள்ளனர். | ரத்துச்செய்யப்பட்ட காசோலைகள் ஆவணச்சான்றுகளுடன் அடையாளப்படுத்தப்பட்டு கணக்கிடப்படல் வேண்டும். |
| (இ) | ஆலோசகரினால் உறுதிப்படுத்தப்பட்டிருந்த தாமத வட்டி மீதான பெறுவனவுகளிற்காக ரூபா 948.27 மில்லியனான ஓர் ஏற்பாடு 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களில் செய்யப்பட்டிருக்கவில்லை. | தாமத கொடுப்பனவுகளிற்கான வட்டி 2020 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் நிகழத்தக்க பொறுப்பாக காட்டப்பட்டுள்ளதுடன் செயற்திட்டத்தினை முடிவுறுத்தும் வரை, அனைத்து பொறுப்புக்களும் ஆர்டிஏ விற்கு மாற்றப்பட்டிருந்தது. | இலங்கை பொதுத்தறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்கி ஒழுக வேண்டும். |
| (ஈ) | நிதிக்கூற்றுக்கள் மற்றும் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செயற்திட்டத்தினால் சமர்ப்பிக்கப்பட்ட விபரங்கள் என்பனவற்றிற்கிடையே சட்டரீதியான இழப்பீட்டு கொடுப்பனவுகள் மற்றும் சட்டரீதியான வட்டிக்கொடுப்பனவுகள் என்பன மீது முறையே ரூபா 127.3 மில்லியன் மற்றும் ரூபா 200.83 மில்லியன் வித்தியாசங்கள் அவதானிக்கப்பட்டிருந்தன. | செயற்திட்டத்தினால் வழங்கப்பட்ட அறிக்கைகள் எப்போதும் செயன்முறைக்குள்ளான ஓர் கூட்டுமொத்த நிலுவை கொடுப்பனவாக இருந்ததுடன் கொடுப்பனவுகள் கூட கணக்குப்பிரிவினால் வழங்கப்பட்டிருந்தது. | நிதிக்கூற்றுக்கள் சரியாக தயாரிக்கப்படல் வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| (உ) | செயற்திட்டமானது 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சிவில் வேலைகளிற்கான ஐ.அ.டொலர் 19.51 மில்லியன் மற்றும் கண்கானிப்பு ஆலோசனையிற்கான ஐ.அ.டொலர் 61.08 மில்லியன் போன்றனவற்றின் கடன் தொகைகளின் நிலுவை மீதிகள் மீதான ஒப்படைப்பு கட்டணங்களிற்காக ஓர் ஏற்பாடு செய்திருக்கவில்லை. | பொதுத்திறைசேரி செயற்திட்டம் சார்பாக செலுத்தப்பட்ட அல்லது செலுத்தப்படவேண்டிய ஒப்படைப்பு கட்டண தொகையினை அறிவித்திருக்கவில்லை. எனவே நிதிக்கூற்றில் ஓர் ஏற்பாடு செய்திருக்கவில்லை. | இலங்கை பொதுத்தறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்கி ஒழுக வேண்டும். |

## 3 பௌதீக செயலாற்றல்

### 3.1 காணி சுவிகரிப்பு செயன்முறை மீதான செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

| கணக்காய்வு விடயங்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|
| காணி சுவீகரிப்பு செயன்முறை 2014 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டு செயன்முறையினை விரைவுபடுத்த உத்தியோகத்தர்களிற்காக ரூபா 29.67 மில்லியன் ஊக்குவிப்புக்களாக செலுத்தப்பட்டிருந்தும் காணி சுவீகரிப்பு செயன்முறை 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கூட பூர்த்திசெய்யப்பட்டிருக்கவில்லை. 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 3,762.4 மில்லியன் தொகை 3,600 காணித்துண்டுகளிற்கான இழப்பீடாக செலுத்தப்பட்டிருந்ததுடன் ரூபா 525.8 மில்லியன் 2,547 காணித்துண்டுகளிற்கான தாமத வட்டியாக செலுத்தப்பட்டிருந்தமையும் அவதானிக்கப்பட்டது. | ஊக்குவிப்பானது ஒவ்வொரு அக்கறையுடையோர் நிறுவனங்களுடனும் தொடர்புபட்ட வேலைகளை கையளித்ததன் பின்னரான ஓர் காலப்பகுதிக்கு செலுத்துவதற்காக வடிவமைக்கப்பட்டுள்ளது. அவர்கள் குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் அப்பணியினை வெற்றிகரமாக பூர்த்திசெய்தால் ஏனைய தாமதங்களை கருத்தில் கொள்ளாது கொடுப்பனவிற்கு தகுதியுடையவர்களாவர். | காணி சுவீகரிப்பு செயன்முறையை விரைவுபடுத்த தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |

### 3.2 ஒப்பந்த நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

| இல | கணக்காய்வு விடயங்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | செயற்திட்டமானது உத்தியோகத்தர்களின் போக்குவரத்து பாவனைக்கான 04 டொயோட்டா போட்டுனா வாகனங்கள், 1 மேர்ச்சன்டீஸ் பென்ஸ் வான் மற்றும் 10 பிக்கப்கள் போன்றனவற்றிற்கான சுங்கத்தீர்வை சலுகைக்கான ஒப்பந்ததாரரின் உரிமம் ஒப்பந்ததாரர் அவ் வாகனங்களை வேலை வழங்குனரிடமிருந்து முன்அனுமதி பெறாமல் இறக்குமதி செய்ததன் காரணமாக மறுக்கப்பட்டிருந்தது. இருப்பினும் செயற்திட்டத்திற்கு, பின்னர் 02 டொயோட்டா | ஜீசீசீ இன் உபபிரிவு 20.2 இன் பிரகாரம் பிணக்கு இணக்க சபை (டிஏபி) செயற்திட்டத்தில் அமைக்கப்பட்டிருந்தது அதன்படி உரிய கொடுப்பனவுகள் டிஏபி மற்றும் சினேக பூர்வ தீர்பனவு குழு (ஏஎஸ்சி) என்பனவற்றினால் வழங்கப்பட்ட தீர்மானத்தில் கூறப்பட்டதனால் ஒப்பந்ததாரரிற்கு செய்யப்பட்டிருந்தது. | சரியான நேரத்தில் சரியான தீர்மானத்தினை எடுப்பதனூடாக மேலதிக கிரயத்தினை குறைக்க நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | போட்டுனா வாகனங்கள் மற்றும் 10 பிக்கப்களிற்காக ஒப்பந்ததாரரிற்கு செலுத்தப்பட்ட சுங்கத்தீர்வை ரூபா 91.74 மில்லியன் மற்றும் தாமத கொடுப்பனவுகளிற்காக செலுத்தப்பட்ட வட்டி ரூபா 27.55 மில்லியன் கூட மீளுப்பெறப்பட வேண்டியிருந்தது. | | |
| (ஆ) | காணி சாத்தியவள கற்கை அறிக்கையின் பாகம் 8.33 இன் பிரகாரம் ஓர் சேவைப்பிரிவினை நிர்மானிக்க கதமனவிலுள்ள ஓர் சேவை பிரிவிற்காக கொள்வனவு செய்யப்பட்டிருந்தும் அது மதிப்பிடப்பட்டிருக்காததுடன் சேவைப்பிரிவினை நிர்மானிக்க எவ்வித பீஓகியுவ் ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருக்கவில்லை. மேலும் தெற்கு அதிவேகப்பாதையின் 46 கி.மீ களின் பின்னர் அதிவேகப்பாதை பயன்பாட்டாளர்களிற்காக எவ்வித சேவைப்பகுதியும் காணப்பட்டிருக்கவில்லை. | தேவையான உள்ளீடுகள் ஈஎஸ்ஈபி 1 இன் ஒப்பந்த பீஓகியுவ் இல் உள்ளடக்கப்படவில்லை. | சேவைப்பகுதியினை வழங்க நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (இ) | செயலாற்றல் பாதுகாப்பு பத்திரத்தினை வழங்குவதற்கான கிரயத்தினை மேற்கொள்வதற்கு ஒப்பந்ததாரர்களினை அனுமதிப்பதனூடாக ஓர் வேறான கொடுப்பனவு உருப்படிகள் அளவைப்பட்டியல்களில் செய்யப்பட்டிருந்தமை உரிய ஒப்பந்ததாரரின் கிரயத்தில் செயலாற்றல் பாதுகாப்பு பத்திரத்தினை பெறுவதற்கான ஒப்பந்தப்பொது நிபந்தனையின் உபபிரிவு 4.2 இன் கீழ் செய்யப்பட்ட ஏற்பாடுகளிற்கு முரணாக காணப்பட்டது. அதன்படி 2021 திசெம்பர் 31 வரை கூட்டுமொத்தம் ரூபா 322.8 மில்லியன் செயலாற்றல் பாதுகாப்பு பத்திரங்களின் கிரயத்தினை மீளப்பெறுவதற்கு ஒப்பந்ததாரரிற்கு பீஓகியுவ் பெறுமதி 97.82 மில்லியன் அதிகரிப்பதன் மூலம் மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது. | ஒப்பந்த பீஓகியுவ் வில் செயலாற்றல் பாதுகாப்பு பத்திரத்தினை வழங்குவதற்கான கிரயம் மற்றும் அனைத்து ஏனைய தேவையான முறிகள் போன்றவற்றிற்கான அனுமதி கொடுப்பனவு உருப்படி 107(2) இன் கீழ் வழங்கப்பட்டுள்ளது. இவ் உருப்படி ஓர் ஏற்பாட்டு மொத்தமாக உள்ளடக்கப்பட்டிருந்தது. | ஏல ஆவணங்கள் சரியாக தயாரிக்கப்படல் வேண்டும். |
| (ஈ) | செயற்திட்டத்தின் ஆலோசனை சேவைக்கான விசேட ஒப்பந்த நிபந்தனைகளின் உபபிரிவு 1.10 இன் பிரகாரம் கம்பனி வரியின் போது உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கான கொடுப்பனவின் அத்தாட்சி சமர்ப்பிக்கப்பட்டால் ஓர் ஏற்பாட்டு கூட்டுமொத்த உருப்படி ஊடாக மீளப்பெறல் செய்யப்படும். ஒப்பந்த உடன்படிக்கையில் சில தேவையற்ற நிபந்தனைகள் உள்ளடக்கப்பட்டதன் காரணமாக ஆலோசகரினால் பெறப்பட்ட ரூபா 53.32 மில்லியன் தொகையான கம்பனி வரி 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக்கூற்றுக்களில் ஓர் பொறுப்பாக காட்டப்பட்டிருந்தது. | ஆலோசனை நிறுவனத்துடன் கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம் உரிய கம்பனி வரி மீளப்பெறப்படவேண்டியதுடன் அதன் அடிப்படையில் ஆலோசகரினால் அது பெறப்பட்டிருந்தது. எனவே ரூபா 53.32 மில்லியனான ஓர் தொகை நிதிக்கூற்றில் ஓர் பொறுப்பாக காட்டப்பட்டிருந்தது. | உடன்படிக்கை ஒப்பந்ததாரர்களிற்கான தேவையற்ற நன்மைகளை குறைக்க தயாரிக்கப்பட்டிருத்தல் வேண்டும். |